

ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், குட்டியபட்டி ஊராட்சியில் புதிய அங்கன்வாடி மைய கட்டிடத்தை ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி திறந்து வைத்தார்.



திண்டுக்கல் மாவட்டம் வடமதுரைகிழக்கு ஒன்றியத்துக்குட்பட்ட அய்யலூர் பேரூராட்சி கவுன்சிலர் வேங்கன் முருகேஸ்வரி தலைமையில், அய்யலூர் பேரூராட்சி மற்றும் சுக்காம்பட்டி, மோர்பட்டி ஊராட்சிகளை சேர்ந்த 300க்கும் மேற்பட்ட அ.தி.மு.க., உள்ளிட்ட மாற்றுக்கட்சியினர் அக்கட்சியில் இருந்து விலகி உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். நிகழ்வில் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன், அய்யலூர் பேரூராட்சி தலைவர் கருப்பணன், கிழக்கு ஒன்றிய செயலாளர் பாண்டி, ஒன்றிய அவைத் தலைவர் முனியப்பன், பொதுக்குழு உறுப்பினர் பாலு, ஒட்டன்சத்திரம் தெற்கு ஒன்றிய செயலாளர் தர்மராஜன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஹரிஹரசுதன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தினேஷ் முத்துகிருஷ்ணன், முருகானந்தம், சிவபாக்கியம் ராமசாமி உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

சட்டப் பேரவை பொதுக் கணக்குக் குழு தலைவர் கு.செல்வப்பெருந்தகை தலைமையில்

# நெல்லையில் 13 துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம்!

## மாவட்ட ஆட்சியர் - குழு உறுப்பினர்கள் முன்னிலையில் நடைபெற்றது!

நெல்லை.நவ.22.

நெல்லை மாவட்ட ஆட்சியர் கூட்ட அரங்கில் சட்டப்பேரவை பொதுக் கணக்கு குழு தலைவர் கு.செல்வப்பெருந்தகை, மாவட்ட ஆட்சியர் மரு. கா.ப. கார்த்திகேயன்,குழு உறுப்பினர்கள் அக்ரி எஸ். எஸ்.கிருஷ்ண மூர்த்தி (போளூர்)கோ.ஐயப்பன் (கடலூர்) எஸ்.சந்திரன் (திருத்தணி) எஸ்.சேகர் (பரமத்திவேலூர்) சட்டப்பேரவை சார்பு செயலாளர் பாலசீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் 13 துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

முன்னதாக நெல்லை மாவட்டத்தில் நடந்து வரும் வளர்ச்சி திட்ட பணிகளை தமிழ்நாடு சட்டப்பேரவை பொது கணக்கு குழு தலைவரும்,தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவருமான செல்வப்பெருந்தகை தலைமையிலான குழு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ஆய்வு நடத்தியது. இந்த குழுவின் உறுப்பினர்களான போளூர் சட்டமன்ற உறுப்பினர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி, திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் சந்திரன், பரமத்திவேலூர் சட்டமன்ற உறுப்பினர் சேகர் உள்ளிட்டோர் நாங்குநேரி பகுதியில் உள்ள சிறப்பு பொருளாதார மண்டலம், நெல்லை சந்திப்பு பகுதியில் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் மற்றும் வ.உ.சி படித்த பள்ளிக்கு அரசு சார்பில் ஒதுக்கப்பட்ட நிதியின் மூலம் கட்டப்பட்ட கட்டிடங்கள்,தாமிரபரணி ஆறு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நடந்து வரும் வளர்ச்சி திட்டங்கள் மற்றும் கணக்கு விவகாரம் தொடர்பாகவும் கேட்டறிந்தனர். பின்னர் நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில்13 துறைகள் சார்ந்த அரசு அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அதில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வரும் நடைமுறை குறித்தும், தேவையான பரிந்துரைகள் குறித்தும் ஆலோசனைகள் நடத்தப்பட்டது.

அதன் பின்னர் சட்டப்பேரவை பொதுக் கணக்கு குழு தலைவர் கு.செல்வப்பெருந்தகை செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

நாங்குநேரி பகுதியில் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கனவு திட்டமாக நாங்குநேரியில் சிறப்பு பொருளாதார மண்டலம் கொண்டு வரப்பட்டது. கடந்த காலங்களில் முறையாக செயல்படுத்தாமல் இருந்தது.

சிறப்பு பொருளாதார மண்டலம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டது.தொழில்துறை செயலாளரிடம் நாங்குநேரி சிறப்பு பொருளாதார மண்டலத்தில் உள்ள பிரச்சினைகள் குறித்து பேசப்பட்டது. அங்கு இருக்கும் பிரச்சினைகள் 6 மாத காலங்களுக்குள் முடிவுக்கு கொண்டு வரப்படும் என துணை செயலாளர் தெரிவித்துள்ளார்.முன்னாள் நீதி அரசர் ரத்தினவேல்பாண்டியன் பரிந்துரையின் படி சாதிய ரீதியான பிரச்சினைகளை களைந்து வேலை வாய்ப்பு அமைக்கவே கலைஞர் அவர்களால் சிறப்பு பொருளாதார மண்டலம் உருவாக்கப் பட்டது. திட்டத்தில் தனியார் பங்களிப்புடன் தவறுகள் நடந்துள்ளது. ஆறு மாத காலத்திற்குள் அனைத்து பிரச்சனைகளும் முடிவுக்கு கொண்டு வந்து மக்கள் வேலைவாய்ப்பை பெற்று பயன்பாட்டிற்கு சிறப்பு பொருளாதார மண்டலம் கொண்டுவர அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் நெல்லை மாவட்டத்திற்கும் சுற்றியுள்ள மாவட்டங்களுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டமாகும்.

இதற்காக 1,400 ஏக்கர் நிலங்கள் குத்தகை வழங்கப்பட்டது.தற்போது ரத்து செய்யப்பட்டுள்ளது.இது தொடர்பாக தமிழ்நாடு அரசு மாவட்ட நிர்வாகம் எடுத்த நடவடிக்கை சரிதான் என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எஞ்சியுள்ள நிலங்கள் தொடர்பான வழக்கு தேசியகம்பெனிகள் சட்ட டிரிபியூனலில் உள்ளது. தற்போது சிறப்பு பொருளாதார மண்டலத்தை செயல்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப் பட்ட வருகிறது. இந்தத் திட்டத்தை விரைவில் செயல்படுத்த தமிழக அரசு முழுமூச்சாக உள்ளது.

நெல்லை மாவட்டத்தில் நடந்து வரும் வெள்ள நீர் கால்வாய் திட்டம் டிசம்பர் மாதத்திற்குள் முடிக்கப்படும் என சொல்லப்பட்ட நிலையில் பெரு வெள்ள பாதிப்பு உள்ளிட்டவைகளின் காரணமாக காலதாமதம் ஏற்பட்டு உள்ளது.மார்ச் மாதத்திற்குள் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு பயன்பாட்டி ற்கு கொண்டுவர பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளது.மாவட்டத்தில் உள்ள 13 துறை சார்ந்த அதிகாரிகளுடன் பொது கணக்கு குழு ஆய்வு நடத்தியுள்ளது.பல்வேறு பரிந்துரை களையும்,விளக்கங்களையும் கேட்டுள்ளது. துறை சார்ந்த செயலாளர்கள் சென்னையில் குழுவிடம் அறிக்கை சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மாசடைந்து வரும் தாமிரபரணி நதியை கழிவுநீர் கலக்காமல் தடுப்பு அமைக்க குறிப்பிட்ட கால அளவிற்குள் நடவடிக்கை எடுக்க மாவட்ட நிர்வாகத்திற்கு அறிவுறுத்தல் செய்யப்பட்டுள்ளது.

தமிழர்களின் நாகரிகம் தாமிரபரணி நதியில் இருந்து தான் ஆரம்பமாகிறது என பெருமை பேசும் நிலையில் ஆற்றில் கழிவுநீர் கலப்பதை தடுத்து தாமிரபரணி ஆற்றை பாதுகாப்பது தமிழர்களின் தலையாய கடமை.சென்னையில் கழிவுநீர் கலக்காத தண்ணீருக்காக ஆதனூரில் இருந்து சைதாப்பேட்டை ஆறு வரை வீடுகள் இருக்கும் இடம்,கழிவு நீர் கலக்கும் இடங்கள் கண்டறியப்பட்டு கழிவுநீர் கலக்காமல் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது.இந்த திட்டம் அங்கு சாத்தியப்பட்டுள்ள போது நெல்லையிலும் அத்திட்டம் சாத்தியப்படும். தாமிரபரணி நதியை பாதுகாக்க ஒருங்கிணைந்த திட்டத்தை அமைக்க வேண்டும்.தாமிரபரணி நதியை பாதுகாக்க சிறப்பு திட்டத்தை தீட்ட வேண்டும். என பொது கணக்கு குழு சார்பில் சட்டமன்றத்தில் வலியுறுத்தப்படும்.

இவ்வாறு சட்டப்பேரவை பொதுக் கணக்கு குழு தலைவர் கு.செல்வப்பெருந்தகை தெரிவித்தார்.

நிகழ்வில் நெல்லை மக்களவை உறுப்பினர் செ. ராபர்ட் புரூஸ், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி மனோகரன்,மாநகராட்சி ஆணையாளர் மரு.என்ஓ. சுகபுத்ரா,சேரன்மகாதேவி சார்ஆட்சியர் அரபித் ஜெயின், மாநகர காவல் துறை துணை ஆணையாளர் அனிதா,முண்டன் துறை புலிகள் காப்பகம் துணை இயக்குனர் இளையராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா,தனி மாவட்ட வருவாய் அலுவலர் ரேவதி,மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் சரவணன், உதவி ஆட்சியர்( பயிற்சி) செல்வி அம்பிகா ஜெயின் உள்பட அரசுத்துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டச் செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் கழக மாநில இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தேனியில் வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச் செல்வன் எம்.பி., தலைமையில் நடைபெற்றது. உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ., பெரியகுளம் தொகுதி பார்வையாளர் முத்துராமலிங்கம், மாவட்ட அவைத்தலைவர் பி.டி.செல்லபாண்டியன், மாவட்ட துணை செயலாளர்கள் செந்தில்முருகன், திருகண்ணன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள், நகர செயலாளர்கள், பேரூர் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இராமநாதபுரம் நகர் பகுதி, மற்றும் பாம்பன், மண்டபம், ராமேஸ்வரம், பகுதிகளில் இராமநாதபுரம் மாவட்டக் கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன் சீத்சிங் காலோன் நேரில் சென்று ஆய்வு செய்தனர் இதில் இராமநாதபுரம் நகர் பகுதிகளில் மிகவும் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பார்வையிட்டனர். உடன் நகராட்சி ஆணையாளர்கள் நகர் மன்ற தலைவர் கார்மேகம், துணைத் தலைவர் பிரவீன் தங்கம், நகர்மன்ற உறுப்பினர் காளிதாஸ் உட்பட பலர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு தேவையான உதவிகளை வழங்கினர்.

அனைத்து அரசு பள்ளிகளிலும்

# ‘மகிழ் முற்றம்’ மாணவர்குழு அமைப்பு!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தகவல்!



சென்னை, நவ. 22 -

சென்னை, சூளைமேடு, ஜெய் கோபால் கரோடியா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி , மகிழ் முற்றம் கையேடு மற்றும் லோகோ ஆகியவற்றை வெளியிட்டார் . அதனை பள்ளிக் கல்வித் துறை அரசு செயலாளர் திருமதி.சோ.மதுமதி, பெற்றுக்கொண்டார். இவ்விழாவிற்கு ஆயிரம் விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், சென்னை மாநகராட்சி பணிகள் குழுத் தலைவர் நே.சிற்றரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசியதாவது:-

முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, துணை முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, பள்ளிக் கல்வித் துறை சார்பாக 2024-2025 ஆம் நிதி யாண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் ஆளுமைத் திறன் மேம்பாட்டுச் செயல்பாடுகள் குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

“அனைத்துப் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களிடையே தலைமைப் பண்பை வளர்க்கும் வகையில், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் பெயர்களில் மாணவர் குழுக்கள் அமைத்து, மாணவத் தலைவர் மற்றும் மாணவ அமைச்சர்கள் தெரிவு செய்யப்படுவர். இதன் மூலம் மாணவர்களிடையே அரசியல் அறிவு சார்ந்த அனுபவங்கள் மற்றும் ஆளுமைத் திறன் மேம்பட, மாதிரி சட்டமன்றம் மற்றும் மாதிரி பாராளுமன்றம் நடத்தப்படும். இதற்காக, தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும். இத்திட்டம் ரூபாய்.2 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்”.

மேற்கண்ட அறிவிப் பின்படி, 2024 25 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் “மகிழ் முற்றம்” மாணவர் குழு (House System) அமைப்பினை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இத்திட்டம் மாணவர்கள் குழுவாக இணைந்து செயல்படுதல், சமூக மனப்பான்மை, வேற்றுமைகள் இல்லாத பரஸ்பர ஆதரவு ஆகியவற்றை முதன்மை நோக்கங்களாக கொண்டுள்ளது. பல்வேறு கல்வி மற்றும் கல்விசார் இணைச் செயல்பாடுகள் மூலம் சமூக உணர்வை ஊக்குவிப்பதற்கும், குழுப் பணியை வளர்ப்பதற்கும், மாணவர் தலைமை பண்பை ஊக்குவிப்பதற்கும் ஏதுவாக வருகை, கற்றல் திறன். மன்றங்கள் மற்றும் கலைத்திருவிழாவில் மாணவர்களின் செயல்பாடுகள் மதிப்பீடு செய்யத் தக்க வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், பள்ளி அளவில் இரு தனிச் செயல்பாடுகளை ஆசிரியர்கள் தேர்வு செய்து மதிப்பீடு செய்யலாம். எடுத்துகாட்டாக நேரம் தவறாமை, காலை வழிபாட்டு கூட்டத்தில் பங்கேற்றல், வீட்டு ப்பாடம் முடித்தல், தன்சுத்தம் பேணுதல் போன்ற செயல்பாடுகளை தெரிவு செய்யலாம். இதன் மூலம் இக்குழு அமைப்பு மாணவர்களிடையே விரும்பத்தக்க மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான தளமாக அமையும்.

மகிழ் முற்றம் திட்டச் செயலாக்கத்திற்கென கையேடு பள்ளிக் கல்வித் துறையால் வடிவமைக்கப் பட்டுள்ளது. இக்கையேட்டில், வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி 37,592 அரசுப் பள்ளிகளில் குழுக்கள் அமைக்கப்படும். உலக குழந்தைகள் தினமான நவம்பர் 20 அன்று மாணவர்களுக்கான வளமான கல்வியை வழங்குவதற்கான ஒரு மைல் கல்லாக இத்திட்டம் செயல் படுத்தப்படும். இன்று மகிழ் முற்றம் தலைவராகப் பொறுப் பேற்றுள்ள மாணவர்களுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறினார்.

இவ்விழாவில் பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர். ச. கண்ணப்பன், இணை இயக்குநர்கள் திருமதி.சசிகலா, வை.குமார், சென்னை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் முனைவர். அ.புகழேந்தி, மாமன்ற உறுப்பினர், திருமதி. எலிசபெத் பாபு, ஆசிரியர்கள் மற்றும் மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

# சிவகங்கை ஒன்றியம் - குமாரபட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி சிறந்த பள்ளியாக தேர்வு!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கேடயம் - சான்றிதழ் வழங்கினார்!

சிவகங்கை, நவ. 22 -

சிவகங்கை மாவட்டம் சிவகங்கை தாலுகா குமாரப்பட்டி யில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் மாணவர் சேர்க்கை அதிகரித்தும் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை ஆங்கில வழியிலான எண்ணும் எழுத்தும் பயிற்சியினை முறையாக கற்பித்தும், சிறப்பான முறையில் மாணவர்களுக்கு கல்வி இணையதள செயல்பாடுகளை கற்பிப்பதும் குறித்து சிறந்த பள்ளியாக தேர்வு செய்யப் பட்டது.

மாவட்டத்தில் மூன்று பள்ளிகள் தேர்வு செய்யப் பட்டது. இதில் குமாரபட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியை திருமதி செல்வமலரின் பணியினை பாராட்டி குழந்தைகள் தினத்தன்று சென்னை யில் நடைபெற்ற விழாவில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கேடயம் மற்றும் சான்றிதழினை வழங்கி பாராட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் புவனேஸ்வரன்,வட்டார கல்வி அலுவலர் பாலாமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித்திடம் தலைமை ஆசிரியை செல்வமலர் வாழ்த்துப் பெற்றார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் பாலமுத்து, மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் புவனேஸ்வரன், வட்டார கல்வி அலுவலர் பாலாமணி, உதவி ஆசிரியர்கள் சந்திரகலா, ஆரோக்கிய ஜெசி, ஊராட்சி மன்ற தலைவர் சூரியகலா மற்றும் கிராம அம்பலகாரர்கள் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், பெற்றோர், ஆசிரியர் கழக உறுப்பினர்கள். உடன் சென்றிருந்தார்கள்.

கிராமத்தின் சார்பில் குமாரபட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியினை தேர்வு செய்த தமிழக முதல்வருக்கும் பள்ளி கல்வித்துறை அமைச்சருக்கும், தமிழக அரசுக்கும் கிராம மக்கள் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது,

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஒரத்தநாடு கு.வை.ஆண்டியப்பன்**

**நவம்பர் 22 (2012)**



பகுத்தறிவு கொள்கைகள் கொண்ட நாடகங்களில் நடித்தன் மூலம் முத்தமிழறிஞர் கலைஞருக்கு அறிமுகமாகி, பின்னர் கழகக் கொள்கைகளை பாடல்கள் மூலம் பிரச்சாரம் செய்தவர்.

ஒரத்தநாடு ஒன்றியக் கழகச் செயலாளராக இரண்டு முறையும் – ஒன்றிய அவைத் தலைவராக இரண்டு முறையும் பொறுப்பு வகித்தவர்.

தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநராகவும், ஊராட்சி மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் சிறை சென்றவர். குறிப்பாக, ‘மிசா’ கைதியாக சிறையில் இருந்தபோது தனக்கு பிறந்த ஆண் குழந்தைக்கு சிறைச்செல்வன் என்று பெயரிட்டு மகிழ்ந்தவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**